# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் — வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 03 | JUNE 2023 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE


## SCC Trade Fair 2023

**Date :**

**Aug. 4,5 & 6 - 2023**

**Friday, Saturday & Sunday**

**Place :**

**V.S. Chellam Saraswathy Maaligai A/c**
**Madurai.**



To


SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems






Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surweillance!!!*

# A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

L.N.R. தாமோதரன் - 98431 71477



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஃகோ மொன்னு பொறெ*

**நமஸ்கார்...**

T.R.மோகன்ராம்
தலைவர்

அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி!!!...

அங்கத்தினர்கள் மற்றும் பொது மக்கள் பலர் ஆண்டுதோறும் தொழில் வர்த்தக கண்காட்சியை மட்டும் நடத்தலாம் என்ற யோசனையை பல முறை தெரிவித்து வருகின்றனர். செயற்குழு கூட்டத்தில், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்களும் தெரிவித்து வருகின்றனர். எதற்கும் தக்க கால நேரம், சாதகமான சூழல் ஏற்பட வேண்டும். அதற்கான நேரம் தற்போது கூடி வந்துள்ளதாகவே கருதுகிறேன்.

ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 7வது செயற்குழு கூட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் வர்த்தக கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டது. முதல் முயற்சியாக, இந்த ஆண்டு (2023) தொழில் வர்த்தக கண்காட்சியை நடத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, வரும் ஆகஸ்ட் மாதம் 04,05 & 06 (வெள்ளி,சனி & ஞாயிறு) ஆகிய மூன்று நாட்களுக்கு மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள வி.எஸ்.செல்லம் சரஸ்வதி அரங்கில் நடத்தப்படுகிறது. சேம்பர் துணைத் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் இந்த வர்த்தக கண்காட்சிக்கு சேர்மன் ஆவார். செயற்குழு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. ஸ்ரீநிவாசன் அவர்கள் வர்த்தக ஸ்டால் கமிட்டி சேர்மன் ஆவார்.

கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சிட்கான் மாநாட்டில் கிடைத்த வரவேற்பின் அடிப்படையில், இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இனி ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் தொழில் வர்த்தக கண்காட்சி **SCC Trade Fair 2023** என்கிற பெயரில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக முக்கியஸ்தர்கள், அமைப்பு நிர்வாகிகள், அங்கத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இதனை பொறுப்பேற்று நடத்தும் செயற்குழு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. ஸ்ரீநிவாசன் அவர்களை சேம்பர் வாழ்த்துகிறது. அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்லும் இணைச் செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண் அவர்களை சேம்பர் பாராட்டுகிறது.

நன்றி


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Team-Chairmen** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. குபேந்திரன்

**16.05.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 7வது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**20.05.2023** – சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு அவர்களின் இல்ல திருமண வரவேற்விற்கு சேம்பர் குழுவினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**31.05.2023** – சேம்பர் செயற்குழு உறுப்பினர் & சமூக வளர்ச்சி குழு சேர்மன் திரு. S.R. சுந்தர்நாத் அவர்களின் இல்ல திருமண வரவேற்பிற்கு சேம்பர் குழுவினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**01.06.2023** – சேம்பர் செயற்குழு உறுப்பினர் & இதழ் குழு சேர்மன் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் குழுவினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

**05.06.2023** – மதுரை மாவட்ட புதிய ஆட்சியர் திருமதி. M.S. சங்கீதா அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

**06.06.2023** – Operational Management என்கிற தலைப்பில் தொழில் வர்த்தக கூட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக Dr. M. பாலாஜி Dean, MBA, Thiagarajar School of Management அவர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தார். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

**11.06.2023** – கன்னியாகுமரி முதல் தென்கொரியா வரை கரியமில வாயுவின் அபாயம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை சைக்கிள் பயணமாக துவங்கியுள்ள திரு. ஸ்ரீநாபன் அவர்களை மதுரையில், நமது சேம்பர் அலுவலகத்தில் வரவேற்று வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார்.

**11.06.2023** – சேம்பர் செயற்குழு உறுப்பினர் & இதழ் குழு சேர்மன் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு சேம்பர் குழுவினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

சமீப காலமாக, நம் சமூக இளைஞர்களிடத்தில், புதுமையான முறையில் சாதனைகளை செய்ய வேண்டும் என்கிற ஆர்வம் காணப்படுகிறது. கரியமில வாயுவின் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளை தடுக்க சைக்கிள் பயணமாக விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் துவங்கியுள்ளார் கன்னியாகுமரி முதல் தென் கொரியா வரை செல்லும் நாகர்கோவில் கோட்டார் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீநாபன் எனும் இளைஞர். இவர் சமீபத்தில் மதுரை வந்திருந்தார். அவரை நமது சேம்பர் மற்றும் சமூக அமைப்புகள் வரவேற்று வாழ்த்தி கௌரவித்தினர்.

மற்றொருவர், பெங்களூருவில் பணியாற்றும் மதுரையைச் சேர்ந்த இளைஞர் விக்னேஷ் என்பவர் மோட்டர் சைக்கிள் பயணமாக கடல்மட்டத்திலிருந்து 19024 அடி உயரத்தில் உள்ள லடாக், உம்லிங் லா–விற்கு சென்றுள்ளார். இது வாட்ஸ்ஆப்–ல் அவரே பலருக்கு பகிர்ந்த தகவல். இருவருக்கும் உள்ள ஒற்றுமை, இந்த சாதனைகளை சமூக வளைத்தளங்களான, இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக், யூடியுப் போன்றவைகளின் உதவியின் மூலம் செயல்பட்டு வருவது. சமூக வளைத்தளங்களில் பொழுதுபோக்காக தேவையில்லாத ரீல்ஸ், காமெடி என நேரத்தை வீணாக்காமல், இது போன்ற முயற்சிகளின் மூலம் சமூக வளைத்தளத்தை நேர்த்தியாக கையாளும் நம் சமூக இளைஞர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பாராட்டி வாழ்த்துகிறது.

**அங்கத்தினர்களின் கருத்து:** லாப் ஸமாச்சார் இதழ் குறித்து, சிலர் தங்களது கருத்துக்களை நேரிலும், வாட்ஸ்ஆப் வாயிலாகவும் தெரிவித்துள்ளனர். ஸ்ரீ தேவி மெட்டல்ஸ் உரிமையாளர் அவர்கள் நேரில் சந்தித்த பொழுது, சென்ற மே மாத இதழில் எனது அறிக்கையில் மண்டேலாவின் சகிப்புத்தன்மை குறித்த தகவல் அருமையாக இருந்தது என தெரிவித்தார். திரு. ஜே.எஸ். சாயிஜீவன் அவர்கள், திரு. ஓ.பி. பாலாஜி அவர்களின் தகவல் மிகவும் பிரம்மிப்பை ஏற்படுத்தியது என்று வாட்ஸ்ஆப் மூலம் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார். அதோடு, சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் ஜெயந்தி டெக்ஸ்டைல்ஸ் திரு. கோபிநாத் அவர்கள், இதழில் வரும் மருத்துவத் தகவல்களைப் பார்த்து, நமது சேம்பர் சார்பாக ஹேப்பி ஸ்ட்ரீட் போன்ற கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்தலாம் எனக் கேட்டுக்கொண்டார்.

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex
MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
B THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

## BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

BVK GROUP

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.



# Operational Excellence...

## ஜூன் மாத தொழில் வர்த்தக கூட்டம்

ஒரு நிறுவனத்தின் நிர்வாகம் சிறப்பாக, திறம் படைத்ததாக எவ்வாறு இயக்குவது என்பது குறித்த விளக்கக் கூட்டம் Operational Excellence என்கிற தலைப்பில் கடந்த 06.06.2023 அன்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு Dr. M. பாலாஜி Dean, MBA, Thiagarajar School of Management அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் துணைத் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சி குழு சேர்மன் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

இது குறித்து விளக்கமளித்த Dr. M. பாலாஜி அவர்கள், ஒரு நிறுவனம் சிறப்பாக இங்குவதற்கு, அந்நிறுவனத்தின் பொருளின் தரம், விலை நிர்ணயக் கட்டுப்பாடு, விநியோகம் மற்றும் மாற்றத்தை எதிர்கொள்ளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

அலுவலகத்தில் நாம் செய்யும் பணிகளை பயனுள்ளதாக ஆக்க வேண்டும். ஒரு மணி துளி கூட அதற்கு தடை, தாமதம் ஏற்படாத வண்ணம் நிர்வாகத்தை திறம்பட கையாள வேண்டும். அடிப்படையில், திட்டத்தை வகுத்து அதன்படி விரைந்து செயலாற்றுதலே Operational Excellence எனக் கூறி, அதற்கு பல்வேறு உதாரணங்களையும் தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.



அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு அருமையாக பதிலளித்தார்.

ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சார்பாக சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி நிவல கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்து உபசரிப்பு செய்தவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.




**Sowndarya Traders**

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
- ★ FANCY CURTAIN CLOTHS
- ★ BABY - PRODUCTS
- ★ PILLOWS, BEDS
- ★ BOLSTERS
- ★ CUSHIONS
- ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# சிறப்பு சந்திப்புகள்



மதுரை மாவட்ட ஆட்சயிராக புதிதாக பொறுப்பேற்றுள்ள திருமதி. எம்.எஸ். சங்கீதா அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். அதோடு, மாநகர வளர்ச்சிக்கு கோரிக்கையும் அளிக்கப்பட்டது. ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் செயல்பாடுகள் பற்றி விவரிக்கப்பட்டது. சேம்பர் நடத்த இருக்கும் வர்த்தக கண்காட்சியைத் துவக்கி வைப்பதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டது. நமது சேம்பர் செயல்பாடுகளை பாராட்டினார். புகைப்படத்தில் (இடமிருந்து வலம்), திருமதி. M.S. சங்கீதா, மாவட்ட ஆட்சியர், திரு. A.B. குமரேஷ் பாபு, பொருளாளர், திரு. N.S பிரேம் குமார், செயற்குழு உறுப்பினர், திரு. K.K. குபேந்திரன், பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ், துணைத் தலைவர்.



நமது லாப் ஸமாச்சார் இதழில், நீண்ட காலமாக விளம்பரம் தந்து ஆதரவளித்து வரும் **ஸௌபாக்யாஸ் ஜுவல்லர்ஸ்** நிறுவனத்தின் உரிமையாளர் திரு. T.L. சபரி பாபு அவர்களை நமது லாப் ஸமாச்சார் இதழ் குழுவினர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து நன்றி கூறி தொடர்ந்து ஆதரவு தர வேண்டி கேட்டுக்கொண்டதுடன், மே மாத இதழ், அவரது கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இவர், நமது சேம்பர்–ன் சிட்கான் மாநாட்டிற்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறார். இவரது தொழில் சிறக்க இதழ் குழு வாழ்த்துகிறது. இதழ்குழுவினரின் இந்த அங்கீகாரம், மகிழ்ச்சியை அளிப்பதாகத் தெரிவித்தார். புகைப்படத்தில் (இடமிருந்து வலம்), திரு. T.K. யாகேஸ்வரன், திரு. T.N. சூரியபிரகாஷ், திரு. S.G. ஸ்ரீநிவாசன், திரு. T.L. சபரி பாபு, திரு. S.M. கார்த்தி குமரன் (இதழ் குழு சேர்மன்) மற்றும் திரு. K.S. சிவக்குமார்.



அகவை 93–ஐ காணும் நம் சமூகத்தின் மூத்தப் பத்திரிக்கையாளர், எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் தமிழகத்தின உயரிய விருதான தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்றவருமான திரு. **V.N. சாமி** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்து ஆசி பெற்றனர்.




ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 7வது செயற்குழு கூட்டம் கடந்த 16.05.2023 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# ஜி.எஸ்.டி., - தகவல்கள்

தகவல் உதவி:
என்.எஸ். பிரேம் குமார்,
சேர்மன், அரசு தொடர்புகுழு, ஸைல. சேம்பர்.

## ஜி.எஸ்.டி., - கேள்வி - பதில்

**கேள்வி:** Authorised Capital என்பதை அதிகரிக்க ROC-க்கு Fees செலுத்தப்படுகிறது. இது Capital Expenditure தான் Revenue அல்ல என பல தீர்ப்புகள் வந்துள்ளது. இதை எவ்வாறு Accounting செய்வது?

**பதில்:** ROC Fees a/c. Dr.
To Bank / Cash என Entry போட்டு பிறகு வருமான வரி Computation செய்யும் போது Disallow செய்யவும்.

**கேள்வி:** ஒரு HUF மற்றொரு நபருடன் கூட்டு வியாபாரம் செய்ய விரும்புகிறது. இயலுமா?

**பதில்:** HUF என்பது வேறொரு நபருடன் சேர்ந்து கூட்டு வியாபாரத்தில் ஈடுபட இயலாது. அதன் கர்த்தா தனிப்பட்ட முறையில் மற்றொரு கூட்டு வியாபாரத்தில் கூட்டாளியாகலாம்.

**கேள்வி:** கிராமப்புறத்தில் ஒரு Industry தொடங்க Subsidy அரசாங்கத்திடமிருந்து பெறப்படுகிறது. இது Revenue / Capital / Deferred Income எவ்வாறு கருதப்படும்?

**பதில்:** தொழிற்சாலை தொடங்க பெறப்படும் Subsidy என்பதும் Revenue Item தான் என Income Tax Accounting Standards ICDS கூறுகிறது.

**கேள்வி:** நாங்கள் தமிழ்நாட்டிலிருந்து Export of Service செய்கிறோம். ஆந்திராவிலிருந்து தற்போது Export of Service செய்ய விரும்புகிறோம். தனியாக GST எடுக்க வேண்டுமா?

**பதில்:** ஆமாம். Supply of Goods / Services ஆகிய இரண்டுக்குமே ஒவ்வொரு மாநிலத்தில் தனித்தனி பதிவு அவசியம்.

**கேள்வி:** நாங்கள் வருடா வருடம் Mercantile Sysytem என்பதை Cash System என Accounting முறையை மாற்றிக் கொள்ளலாமா?

**பதில்:** இயலாது. அது உண்மையான மாற்றமாகவும், தொடர்ந்து பின்பற்றக் கூடியதாக இருந்தால் மட்டுமே வருமான வரித்துறை அனுமதிக்கும்.

**கேள்வி:** ஒரு Clearing and Forwarding Agent ஒரு Client–ன் சரக்கினை Transport செய்ய GTA வைப் பயன்படுத்துகிறார். அந்த GTA, அந்த CHA-விற்கு RCM முறையில் GST போடுகிறார். அந்த GTA அது கொண்டு செல்லும் சரக்கிற்கு எந்த பொறுப்பும் ஏற்பதில்லை. இது சரியா?

**பதில்:** ஒரு GTA என்பது FCM முறையில் வரியிட விருப்பம் தெரிவிக்கவில்லையெனில் அது RCM ஆக தான் வரும். மேலும் சரக்கிற்கு முழு பொறுப்பு அந்த GTA ஏற்க வேண்டும் என்றோ Consignment என்றால் என்ன என்றோ GST சட்டத்தில் எங்கும் கூறப்படவில்லை. எனவே மேற்கூறிய வழிமுறை சரியானதே.

**கேள்வி:** ஊழியர்களுக்கு Gift கொடுப்பதற்காக Silver வாங்கினோம். இதற்கு ITC எடுக்கலாமா?

**பதில்:** எடுக்க இயலாது. இது Blocked Credit ஆகும்.

ஜி.எஸ்.டி., வரியில் சந்தேகமா? வாட்ஸ்ஆப் செய்யவும் 93441 97952

## ஜி.எஸ்.டி., சோதனையில் நிறுவனங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை...

போலிப் பதிவுகளை அடையாளம் காண ஜி.எஸ்.டி. துறை 16.05.2023 முதல் இரண்டு மாதங்களுக்கு விசிட் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. அவர்கள் உங்கள் வணிக இடத்திற்கும் வரலாம். கீழ்கண்ட விஷயங்களை தயாராக வைத்திருக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அதன்படி,

- GST எண் கொண்ட பலகை, நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி தொழிற்சாலை / அலுவலகம் / கடைக்கு வெளியே இருக்க வேண்டும்.
- உங்கள் வணிக இடத்தில் ஜி.எஸ்.டி சான்றிதழ் இருக்க வேண்டும்.
- நீங்கள் உங்கள் வணிகத்தை நடத்தும் அனைத்து இடங்களிலும் (அலுவலகம் / தொழிற்சாலை / கடை / குடோன்) போன்றவை அத்தகைய வளாகத்தின் முகவரியை ஜி.எஸ்.டி சான்றிதழில் குறிப்பிட வேண்டும். இல்லையெனில் அபராதம் ரூ. 50.000/- விதிக்கப்படலாம்.
- விற்பனை மற்றும் கொள்முதல் பில்கள் உங்கள் வசம் இருக்க வேண்டும்.
- உங்கள் வளாகம் வாடகைக்கு விடப்பட்டால், சரியான பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் இருக்க வேண்டும்.
- உங்கள் பதிவுச் சான்றிதழில் நீங்கள் வணிகம் நடத்தும் வளாகத்தைத் தவிர வேறு முகவரி இருந்தால், ஜி.எஸ்.டி அதிகாரி உங்கள் நிறுவனத்தை போலி என அறிவிப்பார்.

### மேற்படி தகவல்களை தவிர சில ஆலோசனைகள்:

அரசு அதிகாரிகள் கண்ணோட்டத்தில் GSTR 1, GSTR 3-B, GSTR 9, GSTR 4 File செய்வதற்கு நீங்கள் தான் முழு பொறுப்பாளி. ஜி.எஸ்.டி. சட்டத்தை பொறுத்த வரையில் வணிகர்களே தினசரி Stock Register மற்றும் தினசரி குறிப்பேடு (Day Book) போன்றவற்றை வணிகம் நடைபெறும் இடத்திலேயே பராமரிப்பு செய்து வர வேண்டும். தவறினால் நீங்கள் கூறுவதை அரசு அதிகாரிகள் செவி கொடுத்து கேட்க மாட்டார்கள். மாறாக, உங்கள் வணிகர்கள் சரியான வரி விகிதத்தில் வரி வசூல் செய்ய தவறி விட்டார் அதற்கான வரி ஏய்ப்பு தொகை, வட்டி & அபராதம் செலுத்த வேண்டும் என்று கூற வாய்ப்பு உள்ளது.

இனி வரும் காலங்களில் நாள்தோறும் உங்கள் தினசரி கணக்கு வழக்குகளை நீங்கள் உங்கள் வணிக நிறுவனத்தில் கட்டாயம் பராமரிப்பு செய்ய வேண்டி இருக்கும். ஆகையால், 2017 முதல் இன்று வரையிலான வருட வாரியாக, GSTR 1, GSTR 3-B, GSTR 9, GSTR 4 போன்றவற்றை File செய்து வைத்திருங்கள்.

Annual Bank Statement, Income Tax Returns, Annual Day Book and Ledger Printout எடுத்து வையுங்கள். ஸ்டாக் புக் இருப்பின் வருட வாரியாக பத்திரமாக வைத்திருங்கள். Purchase File, Sales Bill book, Documents for RCM வைத்திருங்கள். வணிகரின் ஜி.எஸ்.டி பதிவு சான்று நன்கு தெரியும் இடத்தில் தொங்க விடுங்கள். பதிவு சான்றிதழில் உள்ள Registered Place of Business எவை, பங்குதாரர் பெயர் எல்லாம் சரியாக உள்ளதா? என்பதை சரி செய்து வைத்துக்கொள்ளுங்கள்.

# தொழில்முனைவோர் ஒற்றை சாளர முறைக்கு விண்ணப்பிக்கலாம்

தொழில் தொடங்க நினைப்போர், ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அரசுத் துறைகளின் அனுமதி, சான்றிதழ் வெறுவதற்கு ஒற்றை சாளர முறையில் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என மதுரை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. கணேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

டி.டி.சி.பி., அனுமதி, மாசு கட்டுப்பாட்டு வாரியம், தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில்கள் நலத்துறை, சிப்காட் அனுமதி, தொழிலாளர் துறை, தீயணைப்பு துறை, காவல்துறை, பொது சுகாதாரத் துறையின் கீழ் பெற வேண்டிய அனுமதி சான்றிதழ்களுக்கு www.tnswp.com இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பித்தவர்களின் தகவல்கள் அந்தந்த மாவட்ட தொழில் மையம் மூலம் பெறப்பட்டு வழிகாட்டப்படும் என்றார். கூடுதல் தகவல்களுக்கு மாவட்ட தொழில் மைய அலுவலகத்தை அணுகலாம்.

## சென்ற மே மாத ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் அலுவலக நிர்வாக செயல்பாடுகள்

– ஜே.எஸ். சாயிஜீவன், சேர்மன், அலுவலக நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| நிர்வாக / செயற்குழு கூட்டங்கள் | | 03 |
| தொழில் கூட்டங்கள் | | 01 |
| சிறப்பு நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் & சந்திப்புகள் | | 01 |
| புதிய உறுப்பினர்கள் சேர்க்கை | ஆயுட்கால | 00 |
| | சந்தா | 00 |
| நூலக பயன்பாடு | | 0 |
| தொழில் ஆலோசனை / சேவை | | 01 |
| உத்யம் பதிவு / திருத்தம் செய்தவர்கள் | | 01 |
| முக்கிய கடிதப் போக்குவரத்து | | 02 |
| அரசு கோரிக்கை | | 01 |
| பொது நிகழ்ச்சிகள் / விழாக்களில் சேம்பர் பங்களிப்பு | | 03 |
| வேலை வாய்ப்புகள் சேவைகள் | | 01 |
| சமூக சேவைகள் | | 0 |


APPOLO SALES & SERVICE
அப்போலோ மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்
கம்பரசர் மோட்டார் ரூ12,500 முதல்

மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்

ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்


சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்



**Available for Lease Rent**

| | |
|---|---|
| Address | : Shed No. 126, SIDCO Industrial Estate, Kappalur, Madurai - 625008. |
| Plot Size | : 28.23cents, |
| Building Area | : 65.6*41 : 2690Sq.ft. |
| EB Power | : 5KW |

Owner Name :
M.K. Kaladhar Babu
Managing Director,
M/s. Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008.
GST No.: 33AABCP0789M1Z4

Lease Rent for immdiate occpancy
Contact : 99944 35350 / 99944 98090


For
Subscriptions
Advertisement
Donations
etc.,
Make your payment to

**Sourashtra Chamber of Commerce Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0011544


நூறுண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

# திட்டமிடக் கற்போம்

நாம் திட்டமிடத் தவறும்போது தோல்வியடையத் திட்டமிடுகிறோம் என்று ஒரு பொன்மொழி உண்டு. ஒவ்வொரு மனிதருக்கும் திட்டமிடல் என்பது தேவையாக இருக்கிறது. ஒரு தனி மனிதராக, குடும்பத் தலைவராக, பணியாற்றும் நிறுவனத் தலைவராக, பணியாளராக எனப் பல்வேறு பரிமாணங்களில் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டியுள்ளது.

பலரும் பல விஷயங்களையும் திட்டமிட்டுச் செய்தாலும், எங்கே ஒருவருக்கு கட்டாயம் அதிகமாக இருக்கிறதோ அங்கேயே கூடுதல் திட்டமிடுதலை மேற்கொள்கின்றார். மற்ற இடங்களில் அவ்வாறு செய்ய முன்வருவதில்லை.

ஒரு தனிமனிதர் தாம் கற்ற கல்விக்கேற்ப வாய்ப்புள்ள பணியில் அமர்கிறார். தாம் பணியாற்ற வேண்டிய நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிலான நேரம் பணி செய்ய வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது. அவருக்கு சிறிது நாளில் திருமணம் ஆகிறது அவர் குடும்பத் தலைவராகவும் மாறுகிறார்.

பின்னர் குழந்தைகள் பிறக்கின்றனர். அவர் தந்தையாகவும் ஆகிறார். இப்படி அவரது பொறுப்பு படிப்படியாக கூடுகிறது. எப்படிக் குடும்பத்தில் இவரது பொறுப்பு கூடுகிறதோ அப்படியே இவர் பணிபுரியும் நிறுவனத்திலும் இவரது பொறுப்பு அதிகரிக்கிறது. இந்நிலையில் அவர் பல பாத்திரங்களையும் ஏற்று செயல்பட வேண்டும்.

அதே நேரத்தில் அதில் நேர்த்தியும் வேண்டுமென்ற நிலையில் கூடுதல் திட்டமிடல் தேவைப்படுகிறது. இவ்வாறான திட்டமிடுதலில் யார் ஒருவரால் சிறப்பாகச் செயல்பட இயல்கிறதோ அவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதே நேரத்தில் அவருடன் வாழ்க்கை நடத்தும் குடும்ப உறுப்பினர்களுக்கும் சக பணியாளர்களுக்கும் மகிழ்ச்சி உத்தரவாதப்படுத்தப்படுகிறது.

யார் எப்படிப்பட்ட பொறுப்பிலிருந்தாலும் கிடைக்கும் நேரம் ஒரே அளவிலானதே. இவ்வாறு கிடைக்கும் நேரத்தை ஒருவர் எவ்வாறு பயன்படுத்த திட்டமிடுகிறாரோ அதில்தான் அவரது வெற்றி தோல்வி அடங்கியிருக்கிறது. எந்த இடத்தில் நாம் என்ன பணியில் இருக்கிறோமோ அந்த நேரத்தில் அந்த பணியை நேர்த்தியாகச் செய்யும் மனநிலை ஒரு நல்ல வாய்ப்பு.

அந்த மனநிலை ஓரிரு நாளில் வாய்த்து விடாது என்றாலும் தொடர் பயிற்சியின் மூலமாக சாத்தியப்படும். ஒருவர் வீட்டில் சமையல் செய்கிறார். அந்த நேரத்திலேயே அவர் பணியாற்றும் நிறுவனத்தின் எண்ணம் வரலாமா? வரலாம். ஆனால் அதற்கான நேரத்தை தீர்மானிப்பதில் அவர் திட்டமிட வேண்டும். உதாரணமாக பால் காய்ச்சிக்கொண்டிருக்கிறார். சரியாக பால் பொங்க கொஞ்ச நேரம் முன்வரை எண்ணவோட்டங்கள் சிதறவிடலாம்.

பால் பொங்கிவரும்போது மீண்டும் அடுப்படி மனநிலைக்கு வந்துவிட வேண்டும். அதுபோலவே அலுவலகப் பணியில் ஆழ்கிறார். அந்த நேரம் வீட்டில் செய்ய வேண்டிய பணிகளை நினைத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஆனால், பிற்பகல் உணவு இடைவேளையில் வீட்டு நினைவு வரலாம். தேவையான ஏற்பாடுகளை செய்யலாம்.

பொதுவாக ஆட்சிப்பணியிலிருப்போரிடம் இந்த நேர்த்தியினைக் காண இயல்கிறது. ஒரே நாளில் பல்வேறு குழுக்களோடு செயல்படும் தேவை அவர்களுக்கு உள்ளது. அந்நிலையில் அந்தந்த குழுவினரோடு காலை ஒரு சில மணித்துளிகள் அந்தந்த நாளில் நடைபெற வேண்டிய பணிகள் குறித்து திட்டமிடுகின்றனர்.

நாம் ஒரு நிறுவனத்தில் பணியாற்றுகிறோம் என்று சொல்லும்போது சட்ட ரீதியாக நாம் பணியாற்றும் நேரம் ஒரு குறிப்பிட்ட நேரம்தான் என்றாலும் மனரீதியாக நாம் அவ்வாறான நேரக் கணக்கீட்டுடன் மட்டும் வாழ இயலாது.

எப்படி அலுவலகத்தில், பணியில் இருக்கும்போது வீட்டு நினைவு வருமோ, அதுபோலவே வீட்டில் இருக்கும்போதும் அலுவலகப் பணிகள் குறித்த நினைவு வரவே செய்யும். இதில் தவறும் இல்லை. இதனை எவ்வாறு ஒரு சமநிலைக்குள் வைத்து செயல்படுகிறோமோ அதில்தான் ஒருவரின் வெற்றி அடங்கியிருக்கிறது.

ஒரே நேரத்தில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டாலும் ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் பல்வேறு படிநிலைகள் உண்டு. அதாவது தொடக்கநிலை, இடைநிலை, நிறைவு நிலை. இவ்வாறு இருக்கும் நிலைகளில் இயல்பாகவே நகரவேண்டிய முதல் இரண்டு நிலைகளிலேயே நிறைவுநிலைக்கான நேர்த்தியுடன் திட்டமிட வேண்டும்.

அவ்வாறு திட்டமிடும்போது, பெரும்பாலும் முதல் இரண்டு நிலைகளிலேயே, ஒரு நிறுவன தலைவராக தமது எதிர்பார்ப்பை பகிர்பவராக ஒருவர் இருக்க வேண்டும். அவ்வாறு சரியான திட்டமிடலுடன் ஒருவர் பகிர்ந்துவிட்டால் உடன் பணியாற்றுவோர் அதனை நேர்த்தியுடன் செய்து முடிப்பர்.

இந்நிலையில், முதல்நிலையில் சிறப்பான கவனம் செலுத்திவிட்டால் இடைநிலையில் சிறிதளவு கவனமும் நிறைவு நிலையில் ஒரு கூர்மையான பார்வையும் மட்டும் செலுத்தினால் போதுமானது. ஆனால் எந்தத் திட்டமிடுதலும் இல்லாமல் ஒவ்வொரு நிலையிலும் கலந்தாலோசனை நடத்திக் கொண்டிருந்தால் எந்த பணியும் விரைவாக நடந்து முடியாது. பல்வேறு பணிகளும் கூடி அழுத்தம் அதிகரிக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமது குறிக்கோளைப் பகிர்ந்துவிட்டு அது தொடர்பாக உடன் பணியாற்றுவோர் என்ன கருத்து வைத்துள்ளனர் என்று கேட்கும் பொறுமை ஒரு நிறுவன தலைவருக்கு வாய்க்க வேண்டும். இவ்வாறு கேட்கும்போது அவர்களுக்கிருக்கும் அனுபவங்களின் பயனால் இவரைவிட அதனை சிறப்பாகவும் திட்டமிடவும் வாய்ப்புள்ளது.

அவ்வாறு அவர் யோசிக்கும் போது அவரது யோசனை அல்லாமல் நிறுவனத்தின் யோசனையாக மாற்றும் வெற்றியையும் நிறுவன தலைவர் பெறுகின்றார். அங்கே செயல்திறனும் அதிகரிக்கும்.

மனிதர்கள் எந்த அளவுக்கு சுயமரியாதையுடன் நடத்தப்படுகின்றார்களோ அந்த அளவுக்கே அவர்களது செயல்திறனும் வெளிப்படும். அவ்வாறு வெளிப்படும் செயல்திறனுக்கான அங்கீகாரத்தை தாமதப்படுத்தாமல் உடனுக்குடன் வழங்கிவிட வேண்டும். திட்டமிடுதலின் ஒரு கூறாக இதுவும் இருக்க வேண்டும். இது வீட்டுக்கு மட்டுமல்ல, பணிபுரியும் நிறுவனத்திற்கும் பொருந்தும்.

நன்றி: தினமணி

## GeM (Government eMarket)

# தமிழக தொழில் நிறுவனங்கள் ஜெம் பயன்களை பெற வேண்டும்


பொதுத்துறை நிறுவனங்களுக்கு தேவையான பொதுசேவை மற்றும் பொருட்களை ஆன்லைன் மூலம் கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசின் மின்னணு சந்தையான ஜெம் போர்ட்டல் உருவாக்கப்பட்டது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடம் 40 சதவீத உற்பத்தி பொருட்களை பொதுத்துறை நிறுவனங்கள் வாங்க வேண்டும் என மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2021–22ம் ஆண்டுக்கான கொள்முதல் குறித்த விவரப்படி, ஜெம் போர்ட்டல் மூலம் இந்தியாவில் 32 சதவீத MSME. நிறுவனங்களிடம் இருந்து பொதுத்துறை நிறுவனங்கள் பொருட்களை வாங்கியுள்ளன. இந்த ஜெம் போர்டலில், தமிழக சிறு, குறு நிறுவனங்கள் மிகவும் குறைவாக உள்ளதாக தொழில் நிறுவன பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். இதில் பதிவு செய்தால் கிடைக்கும் நன்மைகள் பற்றி காண்போம்...

## ஏன் ஜெம்-ல் விற்க வேண்டும்

- தேசிய பொது கொள்முதல் சந்தைக்கான அணுகல்
- பதிவு செய்ய கட்டணம் அல்லது பணம் இல்லை
- தொடக்க நிறுவனங்கள், எம்.எஸ்.எம்.ஈ.,க்கள் மற்றும் வர்த்தக நிறுவன தயாரிப்புகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் பிரிவுகள்.
- முற்றிலும் காகிதமற்ற தொடர்பற்ற, ஆன்லைன் தளம்
- விற்பனையாளர் பதிவுக்கான முன் நிபந்தனைகளின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிதாக பதிவு செய்யும் விற்பனையாளருக்கு இது வழிகாட்டியாக இருக்கும். https://gem.gov.in/support/sellers/?lang-tamil
- பிராண்ட்-ற்கான விண்ணப்ப மற்றும் பிராண்ட் அங்கீகார செயல்முறை புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- ஒரு ஆர்டருக்கு பல இன்வாய்ஸ்கள்
- ஏலத்தில் பங்கேற்க / வெளியேற எளிதான அணுகல்
- விற்பனையாளர் பங்கேற்புக்கான மீதமுள்ள நேரத்தைக் காண்பிக்க கடிகாரம் RA-வில் டிஸ்ப்ளே செய்யப்படும்.
- விரைவாக குறைகளை தீர்ப்பதற்கான ஆன்லைன் குறை தீர்ப்பு இயங்மைப்பு.
- நிராகரிப்பிற்கான காரணம் அனைத்து விற்பனையாளர்களுக்கும் காட்டப்படும்.
- பொருட்கள் சப்ளையை கண்காணிக்க மற்றும் கட்டண விபரங்களை எளிதாக அறிய எளிமையான விற்பனையாளர் அறிவிப்பு டேஷ் போர்டுகள்.
- தற்போதுள்ள அறிக்கையில் கூடுதலான அளவுருக்களுடன் பிஸினஸ் காக்பிட் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதே போல் ஓ.ஈ.எம். மற்றும் எம்.ஏ.ஐ.டி. பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய சார்ட் விட்ஜெட்கள்.
- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீரை சேர்ந்த விற்பனையாளர் ஏலத்தில் பங்கேற்கும் நேரத்தில் ஐ.டி.ஆர்.-ல் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- மாறும் சந்தை விலை – விலையானது சந்தைநிலவரத்தை பொருத்து மாறுபடக்கூடும்.
- அரசாங்க துறைகள் மற்றும் அவற்றின் அமைப்புகளுக்கு நேரடி அணுகல்.

## ஏன் ஜெம்-ல் வாங்க வேண்டும்

- எளிதாக வாங்குவதற்கான வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது.
- பொருட்கள் / சேவைகளின் தனிப்பட்ட வகைகளுக்கான தயாரிப்புகளின் பலதரப்பட்ட பட்டியலை வழங்குகிறது.
- ரூ. 25000/- வரையிலான தொகைகளுக்கு நேரடி கொள்முதல்
- ரூ. 25000/-க்கு அதிகமான மற்றும் 5 லட்சத்திற்கும் குறைவான தொகைகளுக்கு எல்1 கொள்முதல்
- தனியுரிமை கட்டுரை சான்றிதழ் ஏலம் – தேவைக்கேற்ப குறிப்பிட்ட தயாரிப்பு கொள்முதல்கள்
- நடப்பு விலை நிலவரங்கள் மற்றும் பல சப்ளையர்களிடம் இருந்து பெறப்பட்ட விலை ஒப்பீடு
- விற்பனையாளர்களுக்கு நேரடி அறிவிப்புகள்.
- ஒருங்கிணைக்கப்பட்ட கட்டணமுறை
- தேடி, ஒப்பிட்டு தேர்ந்தெடுத்து வாங்குவதற்கான எளிதாக புரிந்துகொள்ளக் கூடிய இன்டர்ஃபேஸ்
- பொருட்கள் சப்ளையை கண்காணிக்க மற்றும் கட்டண விபரங்களை எளிதாக அறிய எளிமையான பயனர் அறிவிப்பு டேஷ் போர்ட்கள்.
- விரைவாக குறைகளை தீர்பதற்கான ஆன்னை குறை தீர்ப்பு இயங்கமைப்பு
- 3 லட்சம் விற்பனையாளர்களை கொண்ட ஆன்லைன் மிதவை ஏலம்
- இப்போது வாங்குபவர்கள் 10 முதல் 21 நாட்களுக்குள் ஏல காலத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.
- விநியோக காலம் 180 நாட்கள் வரை.
- பலதரப்பட்ட கொள்முதல் செய்பவர்களின் இருப்பிடங்களையும் அளவையும் வழங்கும் வழிவகைகள்.
- சேவைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கொள்முதல் செய்பவர்களை தேர்ந்தெடுக்கலாம்.
- நேரடி கொள்முதல் மோட்-டிற்கு பின்கோட் அடிப்படையிலான விற்பனையாளர் தேர்வு
- விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைச் சேர்க்க ATC நூலகம் இருக்கிறது.
- இரசீது உருவாக்கும்பொழுது கூடுதல் கழித்தல்களை வாங்குபவர்கள் பயன்படுத்தலாம்.
- ஒப்பந்தத்திற்கான DP (விநியோக காலம்) காலாவதி குறித்து வாங்குபவர்களுக்கு அறிவிக்கப்படும்.





# SCC Trade Fair 2023

**Date :**
**Aug. 4,5 & 6 - 2023**
Friday, Saturday & Sunday

**Place :**
**V.S. Chellam Saraswathy Maaligai A/c**
**Madurai.**

## Stall Layout




**SCC Trade Fair 2023 - TEAM**
**K.K. DINESH,** *Chairman,*
**S.G.SRINIVASAN,** *Stall Committee Chariman*

*Committee Members :*
**N.N.HARIRAM,**
**M.K.YOGANATHAN,**
**M.G.VIJAYAKUMAR**

**Stall Promotion :** S.M.KARTHI KUMARAN
**Event Publicity :** S.S.RAMSUNDAR
**Public Relation :** T.N.SURYA PRAKASH
**Food :** Dr. A.R.GANESAN

*Organised by*

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

**For Stall Booking**
**91500 99456**
**94439 30728**

### STALL - SIZES

Stall No. : A1, 1 to 2 = 3m x 2 m
Stall No. : 3 = 2m x 2m
Stall No. : 4 to 9 = 2m x 2m
Stall No. : 10 to 40 = 2m x 2m
Stall No. : 41 to 65 = 2m x 2m
Stall No. : 66 to 69 = 2m x 1.5m
Stall No. : 70 to 71 = 5.25m x 2m

### STALL - TARIFF

| | | |
|---|---|---|
| **GROUND FLOOR** | | |
| Front Stall (2 No's) | = | Rs. 35,000/- Each |
| Stall 1 to 3 | = | Rs. 22,000/- Each |
| Stall 4 to 40 | = | Rs. 18,000/- Each |
| **FIRST FLOOR** | | |
| Stall 41 to 65 | = | Rs. 13,000/- Each |
| Stall 66 to 69 | = | Rs. 10,000/- Each |

**Early bird Offer available**

**Available Amenities**
Table - 1 | Chair - 2
Plug Point & Tube Light

SCAN & PAY

**Bank Details for Payment**
*All Payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
State Bank of India,
Branch : SME Branch
A/c No. : **30134805614** IFSC : **SBIN0011544**

| | | |
|---|---|---|
| **T.R.MOHANRAM** President | **KUMARAN B JAGHUVA** Imm. Pt. President | **K.K. KUBENDRAN** General Secretary |
| **A.B. KUMARESH BABU** Treasurer | **V.V. RAMLAKSHMANJI** Jt. Secretary | **T.R. SARAVANAN** Jt. Secretary |


**VIJAYASHANKAR SCREEN SUPPLIERS**
**Non Woven Fabrics & Bags**
Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper
**Surgical Gown, Mask & More**
N95 Masks
PPE Kit Surgical
**J.A. SANKAR**
**94431 34465**
For Order & Info
93441 04451, 91500 32885 / 86
H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001







# கரியமில வாயு கட்டுப்பாடு...
# நாடுகள் கடந்து சைக்கிளில் விழிப்புணர்வு பயணம்

கறியமில வாயுவால் உலகில் ஏற்படும் மாசு காரணமாக புவி வெப்பம் அடைவதைத் தடுப்பதற்கு ஒவ்வொரு தனி மனிதரும் தாங்கள் சில கட்டுப்பாடுகளுடன் நடந்து கொண்டால் ஓரளவிற்கு பாதிப்பினை குறைக்கலாம் என்பதற்காக, ஒரு விழிப்புணர்வு பிரச்சாரத்தை சைக்கிள் மூலம் மக்களுக்கு கொண்டு செல்ல நாகர் கோவில் கோட்டார் பகுதியைச் சேர்ந்த, பட்டதாரி இளைஞர் திரு. ஸ்ரீநாபன் அவர்கள் கடந்த ஜுன் மாதம் 3ம் தேதி அன்று கன்னியாகுமரியிலிருந்து தென் கொரியா பயணம் மேற்கொண்டுள்ளார். 75000கி.மீ., 11-க்கு மேற்பட்ட நாடுகள், மூன்றரை வருடங்கள் இந்த பயணம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

கடந்த 11.06.2023 அன்று மதுரைக்கு வந்த அவரை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வரவேற்றது. காலை 11-க்கு, ஒரு விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. அதில் அவர், கறியமில வாயுவால் ஏற்படும் விளைவுகளை தனி மனிதர்களாக நாம் தடுப்பதற்கு, சில தவிர்க்க வேண்டிய விஷயங்களைத் தெரிவித்தார்.

அதன்படி, ஒரு முறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக், மலிவான தண்ணீர் பிளாஸ்டிக் பாட்டில்கள், டூத் பிரஷ் போன்றவைகளை தவிர்க்கக் கேட்டுக்கொண்டார். அதோடு, சிறிய தூர பயணங்களுக்கு முடிந்தவரையில், பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தக் கோரியும் கேட்டுக்கொண்டார். மேலும் பல்வேறு தகவல்களையும், தமது அனுபவங்களையும் தெரவித்தார்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றியுரை செய்தார். முன்னாள் தலைவர்கள் திரு. K.K.G. பிரபாகரன் மற்றும் திரு. M.K. கலாதர் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸௌராஷ்ட்ர பொற்கொல்லர் சங்க நிர்வாகிகள், சேம்பர் சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் பலர் இவரை கௌரவித்து வாழ்த்தினர். இந்த சந்திப்பு சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் மூலம், சேம்பர் இதழ் குழு சேர்மன் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நமது ஸௌராஷ்ட்ர சமூகத்தில், உலக நலனுக்காக இது போன்ற புதுமையான சாகச முயற்சியின் மூலம் விழிப்புணர்வு பயணம் மேற்கொள்வது இவரே முதல் நபர் என்பது குறிப்பிடத்தக்கது. 22 வயதே நிறம்பிய இவர், பள்ளி கல்லூரி பயிலும் சமயத்தில், கன்னியாகுமரி முதல் தனுஷ்கோடிக்கும், அதே போல், காஷ்மீர் வரையிலும் இது போன்ற முயற்சியை மேற்கொண்டுள்ளார். அது, தற்கொலை எண்ணங்களை கைவிட்டு ஆக்கப்பூர்வமாக செயல்படும் நோக்கத்திற்காக முந்தைய பயணங்களை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

இவரது வீட்டுப் பெயர் **கசின்**. அபிராமி - பாலா தம்பதியரின் புதல்வன். மும்பையில் கேட்டரிங் இளங்களை பட்டம் பெற்றவர். இவரது நண்பர்கள் மூலம் ஏற்பட்ட இந்த ஈர்ப்பின் காரணமாக இதில் இந்த முயற்சிகளை செய்வதாகத் தெரிவித்தார். தாம் செல்லும் பயணத்தில், தமக்கு உள்ள தொடர்புகளின் மூலம் பள்ளி கல்லூரிகளுக்குச் சென்று தமது விழிப்புணர்வு பிரச்சாரத்தை செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இளைஞர்கள் இதில் விழிப்புணர்வுடன் செயல்பட கேட்டுக்கொண்டார். இவரை **63791 19083** எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

**தினமலர் நாளிதழில் - 12.06.2023**



தென்கொரியாவுக்கு சைக்கிள் யாத்திரை செல்லும் இளைஞர்

மதுரையில் வரவேற்பு

மதுரை, ஜுன் 12- நாட்டில் கரியமில வாயுவால் (கார்பன் டை ஆக்சைடு) ஏற்படும் மாசை கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மதுரை வந்த பட்டதாரி இளைஞர் பாலாஜி நாபனுக்கு பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறை சேர்ந்தவர் பாலாஜி நாபன். சுற்றுச்சூழல் ஆர்வலரான இவர், கன்னியாகுமரியில் இருந்து கிழக்காசிய நாடான தென்கொரியா வரை 11க்கும் மேற்பட்ட நாடுகளை சைக்கிளில் கடந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த இளைஞர் யாத்திரை செல்கிறார்.

நேற்று மதுரை வந்த அவரை சவுராஷ்டிரா சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பினர் தலைவர் டி.ஆர். மோகன்ராம் தலைமையில் வரவேற்றனர். பொதுச்செயலாளர் கே.கே.குபேந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

பாலாஜி நாபன் கூறியதாவது: உலக விழிப்புணர்வு ... தினமான ஜூன் 3 ல் எனது யாத்திரையை துவங்கினேன். மூன்றரை ஆண்டு காலம் பயணித்து தென்கொரியாவின் சியோல் நகரம் செல்வேன். வழிநெடுகிலும் கரியமில வாயுவின் பாதிப்பு குறித்து பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன்.

கரியமில வாயுவின் பாதிப்பை குறைக்க ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக்கை தவிர்த்தல், வேம்பு, மூங்கில் கொண்ட டூத்பிரஷ் பயன்படுத்துவது, முடிந்தவரை பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவது என செயல்படுத்தலாம்.

இதுபோன்ற விழிப்புணர்வுக்காக ஏற்கனவே கன்னியாகுமரி - தனுஷ்கோடி, கன்னியாகுமரி - காஷ்மீர் லடாக் பகுதிக்கு சைக்கிள் யாத்திரை சென்றுள்ளேன்.

நாளை (ஜூன் 13) காரைக்குடி, திருச்சி, தஞ்சாவூர், சென்னை வழியாக செல்ல திட்டமிட்டுள்ளேன், என்றார்.

தென்கொரியாவுக்கு சைக்கிள் யாத்திரை செல்லும் வழியில் மதுரை வந்த இளைஞர் பாலாஜி நாபனை, சவுராஷ்டிரா சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் டி.ஆர். மோகன்ராம், செயற்குழு உறுப்பினர் டி.என். சூரியபிரகாஷ், முன்னாள் தலைவர் கே.கே.ஜி.பிரபாகரன் வரவேற்றனர்.



ஸௌராஷ்ட்ர பொற்கொல்லர் சங்க நிர்வாகிகள் கௌரவிக்கும் நிகழ்வு



ஸ்ரீ நாபன் அவர்களை வழியனுப்பும் தருணம்.

# இரங்கல்



பட்டயக் கணக்காளர்
திரு. S.T. வெங்கடேஷ்

மறைவு
17.05.2023

நமது சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினர், பட்டயக்கணக்காளர் திரு. **S.T. வெங்கடேஷ்** அவர்கள் கடந்த 17.05.2023 அன்று காலமானார். மத்திய அரசின் பட்ஜெட் குறித்து பல முறை நமது சேம்பர் கூட்டங்களில் அங்கத்தினர்களுக்கு விளக்கமளித்தவர். சமீபத்தில் 2023-24 மத்திய பட்ஜெட்-ல் நமது சேம்பரில் பேசியவர் இன்று நம்மைவிட்டு பிரிந்து சென்றது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நமது சேமபர் அழ்ந்த வருத்தத்தையும், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனையும் வேண்டுகிறது.

# இரங்கல்



திரு. S.P. கார்த்திக்

மறைவு .
21.05.2023

நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினர், தொழிலதிபர், திருமதி. S.P. கீதாபாரதி அவர்களின் புதல்வன் **திரு. S.P. கார்த்திக்** அவர்கள் கடந்த 21.05.2023 அன்று காலமானார். அவரது பிரிவி, நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு பேரிழப்பு. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நமது சேமபர் அழ்ந்த வருத்தத்தையும், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனையும் வேண்டுகிறது.

# மருத்துவத் தகவல்

**கேள்வி:** எனக்கு 68 வயதாகிறது. 6 வருடங்களாக முழங்கால் மூட்டு வலியால் அவதிப்பட்டு நான இப்பொழுது மூட்டு மாற்று சிகிச்சை செய்து கொள்ள போகிறேன். செயற்கை மூட்டினில் தொடை பகுதி உலோகத்தில் செய்யப்பட்டது என்று அறிவேன். ஆனால் கால் பகுதியில் பிளாஸ்டிக் கால் செய்யப்பட்ட அல்லது பிளாஸ்டிக் மேலேயும் அடிபாகத்தில் உலோகமும் உள்ள செயற்கை மூட்டும் இருப்பதாக தெரிய வந்துள்ளேன். இதில் எது நல்லதாகும்.

**பதில்:** கால் பகுதியில் உள்ள செயற்கை மூட்டினில் உள்ள இரண்டு வகைகளும் ஒரே தரம் வாய்ந்ததே முழங்கால் மூட்டினில் உள்ள நோயின் தீவிரம். மூட்டின் வடிவம் ஆகியவைகளை வைத்து எது அந்த நோயாளிக்கு சரியோ அது தான் செய்யப்பட வேண்டும். இரண்டு வகையான மூட்டும் உழைப்பை பொறுத்தவரை எந்த வேறுபாடுகளும் கிடையாது. குறிப்பாக யாரோருவர் மூட்டு மாற்று சிகிச்சை மேற்கொள்ளும்போது அந்த மூட்டின் வெற்றி விகிதம் குறைந்தது 10 வருடங்களுக்கு மேல் இருக்கிறதா என்று அறிய வேண்டும். இவை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப் பட்டிருக்க வேண்டும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெஷலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436

லாப் ஸமாச்சார் குறித்து கருத்து தெரிவிக்க **94438 31496**


**TATA AIG INSURANCE** WITH YOU ALWAYS

## TATA HEALTH INSURANCE

தனி நபர் மற்றும் குடும்பத்திற்கு மருத்துவக் காப்பீடு

0% EMI முறையில் மருத்துவப்பாலிசி எடுத்துக்கொள்ளலாம்

15% இந்த விளம்பரத்தை பார்த்து பாலிசி எடுக்கும் நபருக்கு தள்ளுபடி வழங்கப்படும்



S J RAJ KUMAR
Branch Manager
Call: 93608 71715



- நுழைவு வயது வரம்பு கிடையாது.
- காப்பீடு தொகை ரூ. 3 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை.
- அறை வாடகையிலிருந்து 100% க்ளைம் பெறும் வசதி உள்ளது.
- புறநோய் / பல் மருத்துவம் / எடை குறைப்பு சிகிச்சைக்கு க்ளைம் பெரும் வசதி உண்டு.
- வெளிநாடுகளுக்கு சென்று சிகிச்சை பெறும் வசதி. (Global Cover)
- பாரம்பரிய ஆயுஷ் மருத்துவத்திற்கும் முழு காப்பிடு வழங்கப்படும்.
- அட்மிஷனுக்கு முன்னரும், டிஸ்சார்ஜ்க்குப் பின்னரும் ஆகும் செலவுகளைப் பெறலாம்.
- கட்டும் பிரிமியம் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு.(80D)
- மருத்துவனையில் பணம் செலுத்தாமல் சிகிச்சை பெறும் வசதி
- நார்மல் & சிசேரியன் பிரசவத்திற்கான செலவுகளை பெறலாம்.
- சிகிச்சையினால் ஏற்படும் வருமான இழப்பிற்கு காப்பீடு.



## JC கணேசன் மருத்துவமனை

NABH Accredited

அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7

98421 03579, 98427 03579, 97886 03579

jcganesan@gmail.com , Facebook.com/jcortho

**Dr. J.C. GANESAN**
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

**Dr. MALARKODI GANESAN**
MBBS., DGO, DNB(org)

சிறப்பு சிகிச்சை முறைகள்

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி: மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்



# செயற்கை நுண்ணறிவின் பயமும் பயனும்

நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்பங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன. தொழில்நுட்பத்தின் மற்றொரு பரிமாணம் தான் செயற்கை நுண்ணறிவு (AI - Artificial Intelligence). அதாவது, மனிதனைப்போலவே சிந்திக்கும் கணினிகளை உருவாக்குவது.

இந்த கண்டுபிடிப்புகளால் தொழில்நுட்பம் அசுர வேகத்தில் இன்று வளர்ந்து வருகின்றன. இன்றைய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களின் உப தொழில்நுட்பங்களான மெஷின் லேர்னிங் (Machine Learning), டீப் லேர்னிங் (Deep Learning) போன்றவை புள்ளியியல் அடிப்படையில் மட்டுமே இயங்கக்கூடியவை. கற்றலுக்காகக் கொடுக்கப்படும் தரவுகளில் எது அதிகமாகத் திரும்பத் திரும்ப வருகிறதோ அதையே உண்மை என நம்பி கற்றுக்கொள்பவை.

ஆனால், செயற்கை நுண்ணறிவைக் கொண்டு புதியவற்றை உருவாக்கும் தொழில்நுட்பத்தின் பெயர்தான் ஜெனரேட்டிவ் ஏ.ஐ.

பெண்-ஐப் பற்றி கவிதை எழுது என்றால், மைக்ரோ நொடியில் கணினி கவிதை எழுதிவிடும். குறும்படத்துக்குத் திரைக்கதை எழுதித் தரும். இந்தத் தொழில்நுட்பத்தால் உருவானவை தான் சாட்ஜிபிடி (ChatGPT) மற்றும் டால்-இ (DALL-E).

இதில், **சாட்ஜிபிடி** என்பது, உதாரணத்திற்கு, தேர்தல் பிரச்சாரத்துக்காக ஒரு மின்னஞ்சல் எழுது என்று கேட்டால், நீங்கள் கொடுக்கும் உள்ளீடுகளை வைத்து மனிதர்களே தோற்கும் அளவு மிகவும் உணர்வுப்பூர்வமான மின்னஞ்சலை எழுதிக்கொடுக்கும். **டால்-இ** மென்பொருள், நீங்கள் சொற்களாக அளிக்கும் உள்ளீடுகளைக் கொண்டு உங்களுக்குத் தேவையான ஒளிப்படங்கள், ஓவியங்கள், காணொளிகளை உருவாக்கிக் கொடுக்கும்.

ஓபன் ஏஐ நிறுவனம் வடிவமைத்த சாட்ஜிபிடி-க்குப் போட்டியாக கூகுள், அமேசான் போன்ற பெரு நிறுவனங்கள் தங்களுக்கான தொழில்நுட்பங்களைத் தயாரித்தபடி இருக்கின்றன. இதன் மூலம் செயற்கை நுண்ணறிவு புதிய புதிய பரிமாணங்களை அடைந்து கொண்டே இருக்கிறது.

தற்போது ஏஐ தொழில்நுட்பம் சார்ந்து நிறுவனங்களிடையே பெரும் போட்டிச் சூழல் உருவாகி இருக்கிறது. ஆகவே, ஏஐ முறையாக கையாளப்படாவிட்டால் மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓபன் ஏஐ நிறுவனம் சாட் ஜிபிடி எனும் செயற்கை நுண்ணறிவு ஏஐ தொழில்நுட்பத்தை கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகம் செய்தது. தற்போது சாட் ஜிபிடி - 4ம் பதிப்பு வந்துவிட்டது.

இந்த சேவை இலவசம் அல்ல. இந்திய மதிப்பின்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 1200 செலுத்த வேண்டியிருக்கும். முன்பு வெறும் 3000 வார்த்தைகள் மட்டுமே உள்ளீடு செய்து கேள்வி கேட்க முடியும். தற்போது 25000 வார்த்தைகள் வரை அதனுள் உள்ளீடு செய்து தகவல்களை பெறலாம். இதில் சொற்களை மட்டுமல்ல, புகைப்படங்களையும் பதிவிட்டு கேள்வி கேட்க முடியும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் வீச்சு, பாகிஸ்தானில் ஒன்பது வருடங்களாகத் தீர்வு எட்டப்படாத, நீதிபதிகளுக்கே பெரும் சவாலாக இருந்த ஒரு வழக்கைப் பற்றிய விவரங்களை உள்ளீடு செய்த போது ஒன்பது வகையான தீர்ப்புகளை சொல்லி அசத்தி இருக்கிறது சாட் ஜபிடி-4. அது மட்டுமல்ல, பாகிஸ்தான் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப இந்த தீர்ப்புகளை செயற்கை நுண்ணறிவு முன் வைத்திருக்கிறது. மனிதர்களின் உடலில் ஏற்படும் நோயைக் கண்டறிந்து



மருந்து மாத்திரை வழங்குவது முதல் அறுவை சிகிச்சை மேற்கொள்வது வரை இதன் பாய்ச்சல் பெரிதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

பத்து வருடங்கள் ஆகும் என எண்ணிய செயல்களை எல்லாம் நான்கைந்து மாதங்களில் நடந்து விட்டிருக்கிறது. இதனால், மனிதனின் வேலைவாய்ப்பிற்கு பாதிப்பு ஏற்படுமா என்றால், விவசாயம், கட்டுமானம் போன்ற மனித உடல் உழைப்பு தேவைப்படும் துறைகளுக்கு இந்த செயற்கை நுண்ணறிவால் அதிகம் பாதிப்பில்லை என்றாலும், அத்துறைகளிலும் இதன் தாக்கம் கொஞ்சம் இருக்கவே செய்யும்.

மிகப் பெரிய நிறுவனங்களுக்கும், பெரிய அளவில் செயல்திட்டம் வரைபவர்களுக்கும் இந்தத் தொழில்நுட்பம் மிகப்பெரிய வரப்பிரசாதம் ஆகும்.
மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்தத் தொழில்நுட்பம் அளப்பரிய ஆறுதல் தரும் என்று கூறப்படுகிறது.

மாணவர்கள் இது போன்ற செயற்கை நுண்ணறிவு தளத்தை பயன்படுத்தத் தொடங்கிவிட்டால் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றை சீராக கற்காமல் சோம்பேறிகளாகி விடுவார்களோ என்கிற அச்சம், கல்வித்துறை சார்ந்த அறிஞர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு வரமா? சாபமா? என அறியாத நிலையில் மனிதம் கைபிசைந்து நிற்கிறது.

ஒன்றை பயன்படுத்தக் கூடாது என தடை விதித்தால் அதன் மீதான ஈர்ப்பு அதிகரிக்கும். அதற்கு பதிலாக, அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கேள்விக்கு பதில் பெறும் திறமையை மாணவர்களிடம் வளர்க்கலாம்.

அசுர வேகத்தில் தொழில்நுட்பம் வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில், இயந்திரத்துக்கு மனிதனைப் போல மூளையை உருவாக்கி மனிதனைத் தாண்டி களைப்பே இல்லாமல் அதிவேகமாக செயல்படும்படியாக உருவாக்கும் பணி தான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. அதனால் பலதரப்பட்ட வேலைகளை சுலபமாகச் செய்ய முடிகிறது. மாதக் கணக்கில் முடியக் கூடிய வேலையை நாள் கணக்கில் முடிப்பது சாத்தியமாகிறது. நம் நேரத்தை மிச்சப்படுத்துகிறது. பண விரயத்தையும் தடுக்கிறது.

தொழில்நுட்ப வளர்ச்சி முழுக்க முழுக்க மனித சமுதாயத்துக்கு பாதுகாப்பு தருவதாக அமைய வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பம். என்னதான் அசுர வளர்ச்சி அடைந்தாலும், அதைக் கட்டுப்படுத்தும் காரணியாக மனித மூளைதான் எக்காலத்திலும் இருக்க வேண்டும். ஆக, செயற்கை நுண்ணறிவு எனும் கருப்பொருள் மனிதகுல மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் உறுதி செய்தால் எங்கேயும் எப்போதும் மினதம் தழைத்தோங்கும் என்பதை உணர முடிகிறது.

– எஸ்.எஸ்.பிரேம் குமார், வலைத்தளம் & தொழில்நுட்பக்குழு

# கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 5 கோடிக்கு மேல் விற்றுமுதல் உள்ளவர்களுக்கும் இ-இன்வாய்ஸ் பொருந்தும்

01.08.2023 முதல் 5 கோடிக்கு மேல் விற்றுமுதல், 01.04.2017 முதல் 31.03.2023 முடிய உள்ள கணக்காண்டுகளில் ஏதேனும் ஒரு ஆண்டில் 5 கோடி இருந்தாலும், இ-இன்வாய்ஸ் வந்துவிடும்.

01.10.2022 முதல் இ-இன்வாய்ஸ் உள்ளவர்களில் ஒரு சிலர் தெரிந்தோ தெரியாமலோ இ-இன்வாய்ஸ் போடாமல் உள்ளனர். அவை Invalid Invoice ஆகவே கருதப்படும். இது பல பிரச்சனை எதிர்நோக்க வேண்டிவரும்.

5 கோடி விற்றுமுதலுக்கு இ-இன்வாய்ஸ் எனும் போது 50% அதிகமானோருக்கு இ-இன்வாய்ஸ் வந்துவிடும். நீங்கள் கொள்முதல் செய்யும் டீலர்களின் இ-இன்வாய்ஸ் Applicable Status, E Invoice Portal-ல் சென்று அவர்களின் ஜி.எஸ்.டி. எண் போட்டு Status Check செய்து கொள்ளவும்.

E-Invoice Applicable Dealer என்றால் அவர்களிடம் IRN, Ack. No. QR Code Print உள்ள Invoice கேட்டு பெற்றுக்கொள்வதே நல்லது. இல்லையெனில் அந்த ITC, In-eligibility ITC ஆகவே கருதப்படும்.

ITC எடுத்துக்கொண்டால் அதற்கு வட்டியுடன் கூடிய அபராதம் கட்ட வேண்டிய நிலையும் வரலாம். நீங்கள் இன்வாய்ஸ் தயார் செய்யும்போது அந்த டீலர்-ன் முழு விபரமும் (முகவரி, மாநிலம், பின்கோடு, டீலர் ஸ்டேடஸ்) சரியாக இருந்தால் தான் IRN, Ack. No. QR Code உடன் Invoice Generate ஆகும்.

டீலர்களின் Profile சரியாக உள்ளதா என்று இப்போதே சரி பார்த்துக்கொள்வது நல்லது.

# வணிகர்களுக்கு அவகாசம்

சில ஆண்டுகளாக கணக்கு தாக்கல் செய்யாமல் நிழுவை வைத்துள்ள வணிகர்களுக்கு பொது மன்னிப்பு திட்டத்தை மத்திய அரசு இந்தாண்டு ஏப்ரலில் அறிமுகம் செய்தது. இந்த திட்டத்தின் கீழ் உள்ள வணிகர்கள் 2017 முதல் 2019 மார்ச் வரையிலான காலாண்டுகள்; 2019 முதல் 2022ம் நிதியாண்டு வரையிலான ஆண்டு கணக்கு தாக்கல் செய்யாதவர்கள் தாமதக் கட்டணத்துடன் வரும் ஜூன் 30ம் தேதிக்குள் கணக்கு தாக்கல் செய்யலாம் என சரக்கு மற்றும் வேவை வரியான ஜி.எஸ்.டி அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

ஆண்டுக்கு 1.5 கோடி ரூபாய்க்குள் விற்பனை வருவாய் உள்ள வணிகர்கள் தொகுப்பு திட்டத்தின் கீழ் ஜி.எஸ்.டி.ஆர்-4 என்ற படிவத்தை தாக்கல் செய்ய வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஒரு முறை ஜி.எஸ்.டி. தாக்கல் செய்தால் போதும்.

செலுத்த வேண்டிய வரித்தொகை பூஜ்ஜியமாக இருந்தால் அதற்கு தாமதக் கட்டணம் கிடையாது. வரித்தொகை செலுதத வேண்டி இருந்தால் ரூ. 500 தாமத கட்டணத்துடன் கணக்கு தாக்கல் செய்யலாம்.


VEDHAVALLI HOLIDAYS
ஜாலியாக... சென்னையிலிருந்து
சொகுசு கப்பலில் பயணம்...
CORDELIA CRUISES
2N/3D
Rs.29500/-
Date
July 15-17
Aug 12-14
Sep 09-11
www.vedhavalliholidays.com
BOOK NOW
99430 31237
Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking
VEDHAVALLI HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
காமராஜர் சாலை, மதுரை ● வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி

# என்.கே. குப்பய்யன்–ரத்னாமணி பள்ளி – புதிய கட்டிட பூமி பூஜை



மதுரை மகால் 6வது தெருவில், கொடை வள்ளல் என்.கே. குப்பய்யன்-ரத்னாமணி தம்பதியினரால் தானமாக வழங்கப்பட்ட 4000 சதுரடி கொண்ட இடத்தில், சௌராஷ்ட்ரா கல்வி வளர்ச்சி கழகம் சார்பாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு பூமி பூஜை கடந்த 04.06.2023 அன்று நடைபெற்றது. நிலையூர் என்.கே. குப்பய்யன்-ரத்னாமணி பள்ளியின் தலைவர் திரு. கே.ஆர். ஞீதர், தாளாளர் டி.ஆர்.எல். ஹரி ஆகியோர் பூமி பூஜை செய்தனர். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், ஸௌராஷ்ட்ர சேம்பர் முன்னாள் தலைவர் திரு. குமரன் பி. ஜகுவா, தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம், முன்னாள் கவுன்சிலர் திரு. பாலயோகி, கவுன்சிலர் திரு. முபாரக் மந்திரி, ஸௌராஷ்ட்ர கல்லூரி செயலாளர் திரு. டி.ஆர். குமரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# Investing in Mutual Funds Vs. Shares

| Particulars | Mutual Funds | Shares |
|---|---|---|
| Form of Investment | Indirect investment of shares through units of the mutual fund. | Direct investment of shares in a specific company. |
| Diversification | You can have a diversified portfolio with a one-time investment. | Individual investors need to research and make their own investment decisions. |
| Professional Management | Managed by professional fund managers who make investment decisions. | Individual investors need to research and make their own investment decisions. |
| Control | Limited control over investment decisions as they are made by the fund manager. | Investors have complete control over buying/selling decisions & Portfolio composition. |
| Risk | Diversification helps in reducing risk, but still subject to market fluctuations. | Higher risk due to concentration in specific stocks, company-specific events etc. |
| Investor type | Anyone can invest in Mutual Funds. | Best suited for people having expertise in stock markets. |
| Fees and Charges | You have to pay management charges, front-end load/back-end load charges, redemption charges etc. | Brokerage charges and other transaction fees. |

## Psychology Tricks

- **If some one insults you,** pause for a second and look at them and say **"are you okay?"**
- If you think **someone is lying,** look at their eyes and **don't say anything.**
- **If you're in an argument,** keep your voice calm, it'll give them the impression that **you're winning the argument.**
- **Good posture** increases confidence. Spread your body out and take up more space, It'll lead to **increased confidence.**
- Your eyes dilate when talking to a **person you Love.**
- If you're **not following** me you're probable never going to see me again. If you are, congratulations, you are growing mentally.



Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in




Scanned with CamScanner



# புதிய பாராளுமன்ற கட்டடம் திறப்பு

இந்திய திருநாட்டின் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்றாகத் திகழும், ஜனநாயக கோயில் என்று சிறப்புற அழைக்கப்படும் நாடாளுமன்றம், அதன் புதிய கட்டடம் மே 28ம் தேதி அடியெடுத்து வைத்திருக்கிறது.

இந்திப் புதிய கட்டுமானப் பணி 2020, ஜனவரி 21ல் தொடங்கப்பட்டு 26 மாதங்களிலேயே முடிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் வளத்தையும், கட்டடக் கலையின் சிறப்பையும் எடுத்துரைக்கும் வகையில், பல்வேறு கலை அம்சத்துடன் கூடிய வடிவங்களில் இதில் அமைந்துள்ளதால் இக்கட்டடம் முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது. அதோடு, பழைய நாடாளுமன்ற கட்டிடத்தை விட அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த இந்த கட்டடம் 150 ஆண்டுகள் வரை கட்டுமானம் பலமாக இருக்கும் வகையில், ரூ. 970 கோடி மதிப்பீட்டில் இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மூன்று பாகங்களைக் கொண்ட் இக்கட்டடம், முக்கோண வடிவமைப்புடையதாகும். ஒரு பக்கம் மாநிலங்களவையும், மற்றொரு பக்கம் மக்களவையும், இன்னொரு புறம் திறந்தவெளி முற்றமும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் ஆலமரம், புதிதாக ஆலமரம் அமைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில், குடிமக்களுக்கான அரசியலமைப்பு அரங்கமும், கேலரியும் அமைக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 64,500சதுர மீட்டர் பரப்பளவில், 4 தளங்கள் கொண்ட முக்கோண வடிவில் அமையப் பெற்றுள்ள இக்கட்டடமானது ஓவியங்கள், கற்சிலைகள், சுவர் அலங்காரம் உள்பட சமார் 5000 கலை வேலைப்பாடுகளுடன் காண்போரைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. உயர்தர சிமெண்ட் கான்கிரீட் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், சீதோஷ்ண நிலையைப் பராமரிக்கும் வகையில் வெளிப்புறப் பகுதியில் கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறது.

பழைய நாடாளுமன்றத்தில், மக்களவையில் 545 பேரும், மாநிலங்களவையில் 250 பேரும் மட்டுமே அமரும் வகையில் இருக்கைகள் உள்ளன. தற்போதைய புதிய நாடாளுமன்றத்தில் எதிர்காலத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு, மக்களவையில் 988 இருக்கைகளும், மாநிலங்களவையில் 384 இருக்கைகளுடனும் விசாலமான இட வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. பழைய நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடத்துவதற்காக மைய அரங்கு இருந்தது. அதில் இரு அவை உறுப்பினர்களும் அமர்வதற்கான இட வசதி இருந்தது. ஆனால், புதிய நாடாளுமன்றத்தில் மக்களவையிலேயே கூட்டுக் கூட்டத்தை நடத்தும் வகையில் 1272 பேர் வரை அமரும் வகையில் இடவசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது தவிர, 6 கமிட்டி அறைகளும், அமைச்சரவை பயன்பாட்டுக்காக 92 அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களவை, மாநிலங்களவைகளில் எண்ம (டிஜிட்டல்) வாக்களிப்பு வசதி, மல்டி ஊடக ஒளி, ஒலி அமைப்புமுறை உள்ளிட்ட அதிநவீன வசதிகள் இடம்பெற்றுள்ளன. புதிய கட்டடத்தின் மக்களவையின் உள்புறத்தில் தேசிய பறவையான மயில், மாநிலங்களவையின் உற்புறத்தில் தேசிய மலரான தாமரை வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பு அரங்கம் முன் உள்ள வளாகத்தில் தேசிய மரமான ஆலமரம் அமைக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற கட்டடத்தின் முகுப்பில் அசோக சக்கரமும், அதன் கீழே சத்யமேவ ஜெயதே எனும் வாசகமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. கட்டடத்தின் உச்சியில் சிங்கத் தலையுடன் கூடிய அசோக தேசிய சின்னம் கம்பீரத்துடன் காட்சி தருகிறது.

புதிய நாடாளுமன்றத்தின் தரைத்தளத்தில் உள்ள அரசியலமைப்பு மண்டபத்தில், வேத காலம் தொடங்கி தற்போது வரையிலான நாட்டின் ஜனநாயகப் பயணத்தை எடுத்துக் காட்டும் காட்சி அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. மேலும், குடியரசுத் துணைத் தலைவர், மக்களவைத் தலைவர், பிரதமர் ஆகியோர் முறையே வந்து செல்வதற்காக அஸ்வ, கஜ, கருடா ஆகிய வாயில்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் வந்து செல்வதற்காக மகர், ஹன்ஸா, சர்துலா ஆகிய 6 வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாயில் முகப்பில் பழங்கால சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கட்டடம் பல்வேறு மாநிலங்களின் மண்வாசனையை வீசச் செய்திடும் வகையில், தேசத்தின் பல்வேறு பிரபலம் வாய்ந்த இடங்களில் இருந்து உயர்தர பொருள்கள் கொண்டுவரப்பட்டு கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரா, நாகபுரியில் இருந்து தேக்கு, ராஜஸ்தானின் சர்மதுராவில் இருந்து வெள்ளை சலவைக் கற்கள், அஜ்மீரின் சிவப்பு கிரானைட் கற்கள், உத்தர பிரதேச பதோஹி கைவினைஞர்களின் கையால் நெய்யப்பட்ட கம்பள விரிப்புகள், டாமன்-டையுவில் இருந்து மக்களவை, மாநிலங்களவை அரங்குகளில் மேல்புற எஃகு அலங்கார கட்டமைப்புகள், மும்பையில் இருந்து மரச் சாமான்கள், ராஜஸ்தான் மற்றும் உத்திர பிரதேசத்தில் இருந்து கல்சட்ட வேலைபாடுகள் ஆகியவை புதிய நாடாளுமான்ற கட்டடம் கட்டுவதற்கு, அழகு சேர்ப்பதற்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவை ஆகும்.

இதனை அனைத்தையும் விட சிறப்பாக, இறுதியாக, நாடாளுமன்றத்தை திறப்பதற்கு தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ராஜ ராஜ சோழர் காலத்து செங்கோல் இப்புதிய கட்டடத்தின் உச்சியில், மக்களவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே நிறுவப்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டிற்கும், தமிழகத்திற்கும் கிடைத்தப் பெருமையே ஆகும்.


Kindly Save our **Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

Kindly send your Feedbacks of our **laabh Samachar & SCC Activities** To
**93441 97952**


# உலகின் அனைத்து ரசகசியமும் உன் உடலுக்கு உள்ளே..!

மந்திரம் தேடாதே ஒரு தந்திரமும் நாடாதே. உன்னைத் தேடு..!

ஊர் ஊராக சுற்றாதே உன் உடலை சுற்று..!

ஊர் உனக்கு மகுடம் சூட்டி உத்தமன் என பட்டம் தந்தாலும், உடல் உன்னை கை விட்டால் உன் பட்டமும் உன் பதவியும் பிடி சாம்பலாகிவிடும்..!

புறத்தில் உன் குடும்பத்தை நேசித்தாய். அது உன் குடும்பம் என கண்டும் கொண்டாய். ஓடி ஓடி உழைத்தாய் உன் குடும்பத்திற்கு காவல் தெய்வமாக நின்றாய்..!

ஆனால் உனக்கு காவல் தெய்வமாக, உன் உயிரை காக்கும் கடவுளாக இருப்பது உன் உடலே..!

அக குடும்பத்தை மறந்து விடாதே. உன் அக குடும்பம் உன் உடலே..!

உன் அக குடும்பம் சரியில்லை என்றால் சூரிய குடும்பத்தில் நீ இருக்க இயலுவதில்லை..!

உன் உள் குடும்பம் உன் உடலே! அதை மறந்தால் உன் வெளி குடும்பம் கதறினாலும் உன்னை காக்கவும் யாரால் முடியும்..!

மற்ற உயிர்களுக்கு ஒருவன் செய்யும் பாவத்திற்கு விமோசனம் உண்டு..! ஒருவன் அவன் உடலுக்கே செய்யும் பாவத்திற்கு விமோசனம் இல்லை..! காரணம் அந்த உடல் அவன் உயிருக்காகவே சிறப்புமிக்க வரமாக கொடுக்கப்பட்டதால்..!

உடலுக்கு ஒருவன் செய்யும் தொண்டே பூஜை..!

உடலுக்கு உள் சென்று உனக்காக உழைக்கும் உறுப்புகளை வணங்குவதே ஆலயம் சென்று வணங்குவதை விட உயர்வானது..!

உடல் அனுமதித்தால் தான் ஒருவன் சித்தனும் ஆக முடியும்..!

ஒருவன் எப்படிப்பட்டவன் ஆக வேண்டும் என்று தீர்மானிப்பது அவனின் எண்ணங்களே..! ஆனால் அந்த எண்ணங்களை தீர்மானிப்பது உடலே..!

ஒருவன் எதுவாக ஆக விரும்புகிறானோ அதை தீர்மானிப்பதும் உடலே..!

ஒருவன் உண்ணும் உணவும் பேணி காக்கும் உடலும் அழைத்துச் செல்லும் அதன் தன்மைக்கு ஏற்ப..! ஒருவன் அவன் உள் குடும்பமான உடலை கவனித்தால்..! அந்த உள் குடும்பமே உன் வெளி குடும்பத்தை காக்கும்..!

பிறந்த ஒவ்வொருவருக்கும் அவரவர் குலத்தின் குலதெய்வம் அவரின் உடலே..!

உலகின் அனைத்து ரசகியமும் உன் உடலுக்கு உள்ளே..!

தியானம் நம் மனதோடு பேச செய்யும்.

ஆசனம் நம் உடலோடு பேச செய்யும்.

*--வாட்ஸ்ஆப் பகிர்விலிருந்து...*

அதை தேடு..!!!

**- ஜுன் 21, உலக யோகா தின வாழ்த்துகள்**

# கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். பிரதி மாதம் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் சேம்பர் வர்த்தக கூட்டத்தில் அங்கத்தினர்கள் முன் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. எஸ்சிசி தொழில் வர்த்தக கண்காட்சி நடைபெறு நாள்?

..............................................................................................................

2. புதிதாக பொறுப்பேற்றுள்ள மதுரை மாவட்ட புதிய ஆட்சயரின் பெயர்?

..............................................................................................................

3. நம் சமூகத்தில் இவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்றவர்.

..............................................................................................................

4. ஊழியர்களுக்கு பரிசுப்பொருள் வாங்கினால் ஜி.எஸ்.டி-யில் ஐ.டி.சி எடுக்கலாமா?

..............................................................................................................

5. வணிகர்கள் தங்கள் நிலுவை கணக்கு தாக்கல் செய்ய கடைசி நாள்?

..............................................................................................................

| | |
|---|---|
| முதல் பரிசு ரூ. 500/- | பெயர் :........................................................................ |
| | தொழில்:........................................................................ |
| இரண்டாம் பரிசு ரூ. 300/- | தொலைபேசி எண்:........................................................................ |
| | சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை ........................................ |
| மூன்றாம் பரிசு ரூ. 200/- | இருப்பிடம்:........................................................................ |

## CONGRATULATIONS!!!...

| | | |
|---|---|---|
| சென்ற மாத கேள்விக்கு சரியான விடை அளித்து குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்களுக்கு கிடைக்கும் பரிசுகள் | முதல் பரிசு ரூ. 500/- | திரு. எம்.கே. பிரசாந்த் தகவல் தொழில்நுட்பம் திருநகர் / 90950 32725 |
| | இரண்டாம் பரிசு ரூ. 300/- | திரு. கே.எஸ். மோகன் ஹரிலால் பில்டிங் சி.எம்.ஆர். ரோடு / 98430 72626 |
| | மூன்றாம் பரிசு ரூ. 200/- | திரு. ஜி.ஜே. ஷியமளா ஸ்டிக்கர் தொழில் மதுரை / 86103 38587 |

அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பரிசை பெற்றக்கொள்ளவும்

## திருக்குறள்

**வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று**

**பொருள்:** (கோடானுகோடி வருவதானால் மட்டுமல்ல, உள்ளதெல்லாம் போய்விட்டாலும்) பிறருக்கு கொடுக்கக்கூடிய செல்வநிலை மிகவும் குறைந்துவிட்ட காலத்திலும் பரம்பரைப் பொருமையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தம்முடைய நற்குணங்களை விட்டுவிடமாட்டார்கள்.

அதிகாரம் 96 குடிமை (நல்ல குடிபிறப்பு) ஒழிபியல்

**ஸௌ. சேம்பர் குறித்து கருத்து தெரிவிக்க** 93441 97952



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder • Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office : No. 45, Kakkathoppu Street, Town Hall Road, Madurai - 1. Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office : 66, Kamarajar Street, Opp. Keelavasal Bus Stop, Madurai - 9. Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

Your Name is Your Life

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment 98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்






## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj®**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*







## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



## உமா நகர்

ஒரு சென்ட்-ன் விலை ரூ. 4.99L மட்டுமே

அரசு அனுமதி பெற்ற வீட்டு மனைகள் விற்பனைக்கு

DTCP APPROVED

தொடர்புக்கு: திரு. S.A. உதயகுமார் நிறுவனர்

U K ஹோம்ஸ் & பிளாட்ஸ், மதுரை - 625012 +91 99659 81810

**வளர்ச்சி பெறும் திருமங்கலம்**

- மெட்ரோ ரயில் முதல்கட்ட பணிகள்ஆரம்பம்
- ரயில்வே மேம்பாலம் முதல்கட்ட பணிகள் ஆரம்பம்
- அமையவிருக்கும் எய்ம்ஸ் அருகிலுள்ள டவுன்ஷிப் திருமங்கலம்
- எங்கள் மனைப்பிரிவில் இருந்து 6கி.மீ., தொலைவில் கப்பலூர் ZOHO IT கம்பெனி அமைகிறது.
- மனைபிரிவிலிருந்து சிறிது தொலைவில் மெட்ரோ ரயில் ஸ்டேஷன் அமையும் வாய்ப்பு.

*நாளிதழ்களில் வரும் தகவல்கள் படி.

TNRERA Chennai

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் - 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே-அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

info@onvgprint.com

+91 95 97 775 775

FOLLOW US ON

எல்லா விதமான பிரிண்டிங் தேவைக்கு....

## onVGPrint.com

— A unit of VIGNESH GRAPHICS —

visit : www.onvgprint.com

79-A, South Marret Street, Madurai - 625 001. | 33, Manjanakara Street, Madurai - 625 001. | 48/5, TNHB Colony, Mela Anuppanadi, Madurai - 625 001.

Mobile : 93441 01432, 98434 14310 Email : vgmadurai1@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.06.2023 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

# UG CHEMI JAGSAN

# U G கெமி ஜாக்சன்



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



# வேல் மருத்துவமனை

## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service



சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள் » மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

» மூட்டு நுண்துளை சிகிச்சை » விபத்து அறுவை சிகிச்சை
» முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை » விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை

## Electronic Jacquard



Technical Details :

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm



Applications :
- Sarees ● Bed Sheets ● Furnishing ● Dress Material
- Blankets ● Made Ups ● Shirting



N.S. Rajan

# SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org